# தேசபந்துவுக்கு விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, மார்ச் 20

முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை எதிர்வரும் ஏப்ரல் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் தலைமறைவாகியிருந்த முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் நேற்று முற்பகல் மாத்தறை நீதிவான் நீதிமன்றத்தில் சரணடைந்தார்.

வெலிகம-பெலேனபகுதியிலுள்ள விருந்தகம் ஒன்றுக்கு முன்பாக 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பான வழக்கில் அவர் உள்ளிட்ட 8 பேருக்கு எதிராகக் கடந்த பெப்ரவரி 27 ஆம் 2►



மாலைக்கதிர்
Maalaikkathir




சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 06 வியாழக்கிழமை 20.03.2025 கதிர் 158

# குட்டித் தேர்தல் மே 6ஆம் திகதி

## தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 20

336 உள்ளூராட்சி சபைகளுக்குரிய தேர்தல் எதிர்வரும் மே 6 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவால் இந்த அறிவிப்பு இன்று அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைகளுக்கு இன்று வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.




# புதிய கூட்டு காலத்தின் கட்டாய தேவை

## கஜேந்திரகுமார் தலைமையிலான புதிய அரசியல் கூட்டு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 20

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் பல்வேறு அரசியல் கட்சிகள் இணைந்து புதிய அரசியல் கூட்டொன்று யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பல்வேறு அரசியல் கட்சிகளும் தனித் தனியாகவும் அதேநேரம் புதிய கூட்டுக்களை அமைத்தும் போட்டியிடுகின்றன.



இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள கட்சிகள் இணைந்து புதிய கூட்டொன்றை உருவாக்கியுள்ளன.

இந்தப் புதிய கூட்டானது அகில இலங்கை 2►

## யாழ்ப்பாணத்தில் காணாமல்போன 2 மீனவர்களும் தமிழகத்தில் கைது!

தமிழகம், மார்ச் 20

யாழ்ப்பாணத்தில் இருந்து கடற்றொழிலுக்குச் சென்ற வேளை காணாமல்போன கடற்றொழிலாளர்கள் ஐந்து நாட்களின் பின்னர் தமிழகக் கடலோரக் காவல் படையினரால் மீட்கப்பட்டுள்ளனர்.

இராமநாதபுரம், தொண்டி மீன்பிடித்துறைமுகத்துக்குச் சற்று தொலைவில் படகு ஒன்று தத்தளித்துக்கொண்டிருந்ததைக் கண்ணுற்ற தமிழகக் கடலோரக் காவல் படையினர் அவர்களைப் படகுடன் மீட்டு கரை சேர்த்தனர்.

2►



## எமது சுயேச்சைக் குழு நிராகரிக்கப்பட்டால்

# கஜேந்திரகுமார் தலைமையிலான முன்னணியினருக்கு வாக்களியுங்கள்

## யாழ். மக்களிடம் அர்ச்சுனா எம்.பி. வேண்டுகோள்

யாழ்ப்பாணம், மார்ச் 20

எமது சுயேச்சைக் குழு நிராகரிக்கப்பட்டால், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினருக்கு வாக்களியுங்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்புமனுக்களை இன்று வியாழக்கிழமை கையளித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“யாழ்ப்பாணத்தில் உள்ள 17 உள்ளூராட்சி



சபைகளில் 11 சபைகளுக்கே வேட்புமனுக்களைக் கையளித்துள்ளோம். ஏனைய தீவகம் உள்ளிட்ட 6 சபைகளில் போட்டியிடவில்லை.

யாழ். மாநகர சபை வேட்புமனு 2►

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## கஜேந்திரன் தலைமையிலான.....

தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சைக்கில் சின்னத்தில் வடக்கு, கிழக்கு முழுவமும் இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுகின்றது.

இந்தக் கூட்டில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கட்சி, தமிழ்த் தேசிய பசுமை இயக்கம், ஜனநாயகத் தமிழரசு, தமிழ் மக்கள் கூட்டணியில் இருந்து பிரிந்த அருந்தவபாலன் அணி ஆகிய தரப்புக்கள் அங்கம் வகிக்கின்றன.

மேற்படி கட்சிகள் இணைந்து நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்புமனுக்களையும் தாக்கல் செய்துள்ளன.

இந்தப் புதிய கூட்டு உருவாக்கம் மற்றும் தேர்தல் நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் மேற்படி கட்சிகள் யாழ்ப்பாணத்தில் இன்று ஊடக சந்திப்பை நடத்தியுள்ளன.

இதன்போது நேர்மையான புதிய கூட்டு காலத்தின் கட்டாய தேவை என்று மேற்படி கட்சிகளின் தலைவர்கள் தெரிவித்தனர்.

## தேசபந்துவுக்கு .....

திகதி மாத்தறை நீதிவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்தது.

இந்தநிலையில், தலைமறைவாகியிருந்த தேசபந்து தென்னக்கோன் நேற்று முற்பகல் மாத்தறை நீதிவான் நீதிமன்றத்தில் சரணடைந்திருந்தார். அதையடுத்து அவர் இன்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இன்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது தேசபந்து தென்னக்கோனை எதிர்வரும் ஏப்ரல் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## யாழ்ப்பாணத்தில் .....

அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் அவர்கள் இருவரும் குருநகர் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும், கடந்த 15ஆம் திகதி கடற்றொழிலுக்குச் சென்ற சமயம் படகு இயந்திரக் கோளாறு காரணமாக கடலில் தத்தளித்து வந்தனர் எனவும் கூறியுள்ளனர்

இருவரையும் கைது செய்துள்ள தமிழகப் பொலிஸார், இருவரிடமும் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இருவரும் கடத்தல் நோக்கத்துடன் தமிழகக் கடற்பரப்பினுள் நுழைந்தார்களா எனும் சந்தேகத்துடன் விசாரணைகளைத் தமிழகப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# மணிவண்ணன் அணியினர் வேட்புமனு

யாழ்ப்பாணம், மார்ச் 20

உள்ளூரார் அதிகார சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காகத் தமிழ் மக்கள் கூட்டணி யாழ்ப்பாணத்தில் இன்று வேட்புமனுவைத் தாக்கல் செய்தது.

இன்று காலை சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் தலைமையிலான குழு வேட்புமனுவைத் தாக்கல் செய்தது.



# வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபைக்கு தமிழரசு வேட்புமனு

வவுனியா, மார்ச் 20

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபைக்குப் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை இலங்கைத் தமிழரசுக் கட்சி வவுனியாவில் இன்று தாக்கல் செய்தது.

வேட்புமனுவை நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தலைமையிலான குழு கையளித்தது.



வவுனியா மாநகர சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை, வெண்கலசெட்டிகுளம் பிரதேச சபை ஆகியவற்றில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் நேற்று தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## எமது சுயேச்சைக் குழு .....

சிலவேளைகளில் நிராகரிக்கப்படலாம். அவ்வாறு நிராகரித்தால் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கட்சிக்கே எமது ஆதரவை வழங்குவோம். அவர்களுக்கே வாக்களிக்குமாறு கோருவோம்.

தற்போதுள்ள தமிழ்த் தலைமைகளில் கஜேந்திரகுமார் பொன்னம்பலமே விலை போகாதவராக இருக்கின்றார். எனவே, அவருக்கே எமது ஆதரவை வழங்குவோம்.

ஆட்சியில் உள்ளவர்கள் எம்மைப் பார்த்து பயப்படுகின்றனர். நான் நாடாளுமன்றத்தில் கூறாத விடயத்தைக் கூறியதாக கூறி எனது உரைகளை ஒளிபரப்பத் தடை விதித்துள்ளார்கள்.

அதேபோன்று எனக்குப் பாதுகாப்பு வழங்குமாறு நான் கோரிய போதிலும் எனக்கான பாதுகாப்பு வழங்கப்படவில்லை.

ஆனால், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு வழங்கியுள்ளனர். எனது உயிருக்கு சிறுபான்மை இனத்தவர்களால் அச்சுறுத்தல் இருக்கின்றது." - என்றார்.



# உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனு ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் இன்றுடன் நிறைவு!

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் இன்று நண்பகல் 12:00 மணியுடன் நிறைவடைகின்றன.

கடந்த 17 ஆம் திகதி 336 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை ஆரம்பமாகிய நிலையில், இன்று நண்பகல் 12:00 மணிக்குப் பிறகு வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் உள்ளூராட்சி தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தப்பிச் சென்ற 1600க்கும் அதிகமான முப்படை உறுப்பினர்கள் கைது!

சட்டபூர்வமாக ராஜினாமா செய்யாமல் பணியில் இருந்து தப்பிச் சென்ற முப்படை உறுப்பினர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் கடந்த பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி தொடங்கப்பட்டன.

பாதுகாப்புச் செயலாளர் சம்பத் துய்யகொந்தவின் உத்தரவின் பேரில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அதன்படி நேற்று வரையில் சட்டபூர்வமாக ராஜினாமா செய்யாமல் பணியில் இருந்து தப்பிச் சென்ற 1,604 முப்படை உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முப்படையினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது 1,444 பேரும், பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது 160 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்களில் 1,394 பேர் இராணுவ வீரர்களாக காணப்படுவதுடன், 138 பேர் விமானப்படை வீரர்களாகவும், 72 பேர் கடற்படை வீரர்களாகவும் உள்ளனர்.

## தேசிய மக்கள் சக்தி யாழில் வேட்புமனு

யாழ்ப்பாணம், மார்ச் 20

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காகத் தேசிய மக்கள் சக்தி யாழ்ப்பாணத்தில் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தது.

இன்று முற்பகல் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில், யாழ்ப்பாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்புமனுக்களைக் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் தேசிய மக்கள் சக்தி தாக்கல் செய்தது.

இதன்போது தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கருணைநாதன் இளங்குமரன், ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன், சண்முகநாதன் ஸ்ரீபவனந்தராஜா மற்றும் கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள், வேட்பாளர்கள் உள்ளிட்டோரும் வருகை தந்திருந்தனர்.



## மாத்தறை நீதிமன்றில் தேசபந்து தென்னகோன் ஆஜர்படுத்தப்படவுள்ளார்

மாத்தறை வெலிகம பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றின் முன் நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் கொழும்பு குற்றப்பிரிவு அதிகாரி ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் உட்பட 8 பேரைக் கைது செய்து முன்னிலைப்படுத்துமாறு மாத்தறை நீதவான் நீதிமன்றம் கடந்த பெப்ரவரி மாதம் (28) உத்தரவிட்டது.

எனினும் அவர் நீதிமன்றை தவிர்த்த காரணத்தால், மாத்தறை நீதவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்தது.

அதன் பின்பு, 20 நாட்கள் தலைமறைவாக இருந்த தேசபந்து தென்னகோன் நேற்று நீதிமன்றத்தில் சரணடைந்தார்.

நேற்று காலை மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் சரணடைந்த பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை, இன்று வரை விளக்கமறியலில் வைக்க, மாத்தறை நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

குறித்த உத்தரவிற்கு அமைய தேசபந்து தென்னகோன் நேற்று மாலை விசேட பாதுகாப்பின் கீழ் அங்குணுகொலபெலஸ்ஸ சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், இன்று மீண்டும் மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

மேலும் தேசபந்து தென்னகோனின் பிணை மனு மீதான தீர்ப்பை மாத்தறை நீதவான் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு அறிவிக்க உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## வவுனியாவில் சஜித் அணி வேட்புமனு



வவுனியா, மார்ச் 20

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வவுனியா மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுக்களை ஐக்கிய மக்கள் சக்தி இன்று தாக்கல் செய்தது

வவுனியா மாநகர சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை, வெண்கல செட்டிகுளம் பிரதேச சபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, வவுனியா சிங்கள பிரதேச சபை ஆகியவற்றில் போட்டியிடுவதற்கான வேட்புமனுக்களை ஐக்கிய மக்கள் சக்தி தாக்கல் செய்தது.

இந்த வேட்புமனுக்களை நாடாளுமன்ற உறுப்பினர் முத்து முகமது மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் மாவட்ட அமைப்பாளர் ரசிக்கா பிரியதர்சினி தலைமையிலான குழுவினர் கையளித்திருந்தனர்.

வவுனியா மாவட்டத்தில் உள்ள ஐந்து உள்ளூராட்சி சபைகளிலும் ஐக்கிய மக்கள் சக்தி இம்முறை போட்டியிடுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.



## டக்ளஸ் தலைமையில் ஈ.பி.டி.பி. வேட்புமனு

யாழ்ப்பாணம், மார்ச் 20

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி இன்று யாழ்ப்பாணத்தில் தாக்கல் செய்துள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டது.



கிறீன் மீடியா நிறுவனத்தினர் வழங்கும்

# தமிழர் பொருண்மியத்தின் 100 சிறப்பிதழ் வெளியீடு

வெள்ளிக்கிழமை | பங்குனி 21 | 2025

3.00 மணி

இடம்: ராஜா கிறீம் ஹவுஸ் – சரஸ்வதி மண்டபம்

இல.37, சேர் பொன் இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.

மங்கள விளக்கேற்றல்

வரவேற்புரை

தமிழர் பொருண்மியத்தின் முன்னாள் ஆசிரியர்
திரு பாரதி ராஜநாயகம் அவர்களின்
நினைவஞ்சலி நிகழ்வு.

தலைமை உரை

பிரதம விருந்தினர் உரை

சிறப்பிதழ் வெளியீடு

இதழ் நயப்புரை

வாழ்த்துரை

விருந்தினர்கள் உரை

நன்றியுரை

தமிழர் பொருண்மியம்
வாரமலர்
TAMILS ECONOMY
கிறீன் மீடியா பிறைவேட் லிமிட்டட்

# வாழ்தல் இனிது!

வாழ்க்கையில் ஒருவரை மட்டும் காதலிப்பது, அவரையே இணையாக ஏற்று வாழ்வது என்பது எல்லாருக்கும் சாத்தியம் இல்லை. ஒரு சிலருக்கு மட்டும் அப்படி அமையலாம். பலருக்கு அமையாமல் போகலாம். அதற்காக திரும்ப காதல் வரக் கூடாது என்ற விதி ஏதும் இல்லை. காதல் திரும்ப வரலாம், ஒரு முறை மட்டுமல்ல, பலமுறை. ஏதேனும் ஒரு காதலுறவு கல்யாணம் வரை போகலாம். இது யதார்த்தமானது மட்டுமல்ல, ஆரோக்கியமானதும் கூட. இது பெண், ஆண் இருபாலருக்கும் பொருந்தும். என்றாலும், ஆணுக்குத் திரும்ப காதல் வருவதை எந்த விமர்சனமும் இல்லாமல் ஏற்றுக்கொள்ளும் சமுதாயம், பெண்ணுக்கென்று வரும்போது அப்படி நடந்துகொள்வதில்லை. தேவையற்ற கேள்விகள் கேட்டு, அவளைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றி, மனதளவில் அவளை ஆயுள்தண்டனை கைதியாக்குகிறது.

ஒரு பெண்ணும் ஓர் ஆணும் காதலிக்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். சில காலத்திற்குப் பிறகு அவளுக்கு அவனைப் பிடிக்காமல் போய்விடலாம் அவனுடன் இணைந்து வாழ்வது ஒத்து வராதெனத் தோன்றலாம் அவனைப் பிரிய நினைக்கலாம். இதெல்லாம் இயல்பானது. 'பிடித்திருக்கிறது' என்று சொல்ல எவ்வளவு உரிமை இருக்கிறதோ, அதே அளவு உரிமை, 'பிடிக்கவில்லை, பிரிந்துவிடலாம்' என்று சொல்வதற்கும் பெண்ணுக்கு உண்டு. இல்லை, வேறு ஏதாவது காரணத்தால் காதல் கைகூடாமல் போகலாம், இருவரும் பிரிய நேரிடலாம்.

காதல் கைகூடாததால், ஆண் தாடி வளர்ப்பதையும், தண்ணி அடிப்பதையும், சோகமாகத் திரிவதையும் பார்த்துப் பரிதாபப்படும் பொதுப்புத்தி, பெண்ணுக்கு ஏற்படும் மனஅழுத்தத்தையும், அவள் சோகத்தையும் பெரிதாக அங்கீகரிப்பதில்லை. அதுவும், பெண் தன் விருப்பத்தின் பேரில், காதலித்த ஆணை வேண்டாம் என்று சொன்னாலோ, பிரிய முடிவெடுத்தாலோ, முதலில் அந்தக் காதலனாலேயே அதை ஒப்புக்கொள்ள முடியாது. தன் 'ஆண்மை'க்கு இழுக்கு ஏற்பட்டு விட்டதாக, தான் 'அவமானப்படுத்தப்பட்டு விட்டதாகக்' கோபப்படுகிறான். சுற்றியிருப்பவர்களும், 'திமிர் பிடிச்சவ', 'ஆனாலும் ஒரு பொம்பிளைப் பிள்ளைக்கு இவ்ளோ திமிர் கூடாது' என்றெல்லாம் அந்தப் பெண்ணைத்தான் குறை கூறி, அந்த ஆணுக்காகப் பரிதாபப்படுகின்றனர். காதலி வேண்டாமென்று சொல்லிவிட்டதால் காதலனுக்கும் சோகம் இருக்கும்தான், வருத்தம் இருக்கும்தான், அதையெல்லாம் தாண்டி, இது அந்தப் பெண்ணின் உரிமை, அதை மதிக்க வேண்டும் என்ற புரிதலுடன், கண்ணியமாக விலக வேண்டும். அதை விட்டுவிட்டு, மற்றவர்களுடன் சேர்ந்து கொண்டு தன் முன்னாள் காதலியைத் தூற்றுவதும், இழிவுபடுத்துவதும், பழிவாங்க நினைப்பதும் அப்பட்டமான உரிமை மீறல். தோழர்கள் இதை உணர வேண்டும்.

இப்போது பெண்ணுக்கு வருவோம். ஏதோ ஒரு காரணத்தால், அவள் பிரியும் முடிவு எடுத்திருந்தாலும், அந்த முடிவால் அப்பெண்ணுக்கும் சோகம் இருக்கும், கனவுகள் கலைந்த வருத்தம் இருக்கும். எல்லோரும் மோசமாகப் பேசுவார்கள் என்று அறிந்திருந்தும், அந்தப் பெண் பிரிய முற்படுகிறார் என்றால் அவளுக்கென்று பிரச்னைகள் இருக்கும், காயங்கள் இருக்கும், நியாயங்கள் இருக்கும். அதை எல்லோரிடமும் சொல்ல முடியாது, சொல்ல வேண்டிய அவசியமும் இல்லை. அவள் முடிவை மதிக்காமல், அவளைத் தூற்றுவதுதான் பெரும்பாலும் நடக்கிறது. இதன் விளைவாக, தனக்குள் புழுங்கி, மன உளைச்சலுக்குள் (depression) போகும் பெண்கள் இங்கு அதிகம். மற்றவர்கள் இழிவுபடுத்துவது ஒரு புறம் என்றால், காலங்காலமாக ஆணாதிக்கச் சமுதாயம் செய்த மூளைச்சலவையால், தான் 'நல்ல பெண் இல்லையோ?', 'கற்புள்ள பெண் கிடையாதோ?', 'குடும்பத்துக்கு ஏற்ற பெண் அல்லவோ?' என்றெல்லாம் தன்னையே விமர்சித்து, காயப்படுத்திக் கொள்கிறாள் அந்தப் பெண்.

மனதளவில் பெண்ணுக்கு ஏற்படும் காயங்கள் காலப்போக்கில்தான் ஆறும். 'நீ இப்படியே இருக்கக் கூடாது, உனக்கேற்ற துணையைத் தேடிக் கொள், கல்யாணம் பண்ணிக்கொள்' என்று குடும்பத்தினரும் நண்பர்களும் சுற்றியிருப்பவர்களும் அட்வைஸ் பண்ண ஆரம்பிப்பார்கள். அவள் தன்னைச் சரிப்படுத்திக் கொள்வது எளிதான காரியமில்லை. 'திரும்பவும் காதலிக்கத்தான் வேண்டுமா?', 'அவனும் முன்பு பார்த்தவனைப் போல் இருக்க மாட்டான் என்பது என்ன நிச்சயம்?', 'அவனுக்கும் எனக்கும் ஒத்து வருமா? அவன், என்னோட பழைய காதலை எப்படி எடுத்துக்கொள்வான்?', 'சுற்றியுள்ளவர்களும் நண்பர்களும் என்ன சொல்வார்கள்? என்னைத் தப்பாக நினைப்பார்களா?' என்றெல்லாம் சந்தேகங்களும் பயங்களும் குழப்பங்களும் வரும். அதிலிருந்து மீண்டு, இன்னோர் ஆணைத் தேர்ந்தெடுப்பது, காதலிப்பது என்பது பெண்ணுக்கு அவ்வளவு எளிதான காரியமில்லை. குற்றவுணர்வும் தன்னைப் பற்றிய விமர்சனங்களும் அவளைப் பாடாய்ப்படுத்தும்.

இந்த நிலையில் உள்ள பெண்களைப் பரிவுடன் அணுக வேண்டும். எந்தத் தீர்ப்பும் எழுதாமல், முன்முடிவு கண்ணாடி போட்டுக் கொள்ளாமல் அவர்களுடன் உரையாடுவது முக்கியம். 'இதில் எந்தத் தப்பும் இல்லை. உன் வாழ்க்கை, உன் முடிவு, உன் உரிமை கண்ணம்மா. எந்தக் குற்றவுணர்வும் இல்லாமல் வாழ்க்கையை எதிர்கொள். நேசமான இணையுடன் வாழ முடிவு செய்துவிட்டால், அதில் ஏற்றத்தாழ்வுகள் வரத்தான் செய்யும். அதற்குப் பயந்து கொண்டு நேசிக்காமல் இருந்தால், இணையைத் தவிர்த்தால், இழப்பு உனக்குத்தான். நம்பிக்கையுடன் முயற்சி செய். நாலு பேருடன் பழகிப்பார். உனக்கு ஏற்ற அருமையான இணையர் கிடைப்பார்' என்று நமது அன்பான பெண்களுக்கு, தோழிகளுக்குச் சொல்ல வேண்டும். நம்பிக்கையளிக்க வேண்டும். 'வாழ்க்கையில் ஒரே ஒரு முறைதான் காதல் வரும். அது முடிந்து விட்டால், இன்னொரு காதலுக்கு இடமேயில்லை' என்று வரும் சினிமா வசனமெல்லாம் வறட்டுத்தனமானது, அன்புசூழ் யதார்த்த வாழ்க்கைக்கு ஒத்து வராது என்பதை அழுத்தமாக எடுத்துரைக்க வேண்டும்.

ஒரு வழியாக மீண்டு வந்து, மறுபடியும் காதலித்து, தனக்கேற்ற இணையைத் தேர்ந்தெடுத்து, கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன் என்று பெண் அறிவிக்கும் போது, அதற்கு இந்த ஆணாதிக்கச் சமுதாயம் ஆற்றும் எதிர்வினையில், வன்மமும் பெண் வெறுப்பும் சரிவிகிதத்தில் இருப்பது கசப்பான உண்மை. பெற்றோர் பார்த்து செய்யும் ஏற்பாட்டுத் திருமணமாக இருந்தால்கூட, 'எப்படியோ ஒரு ஏமாந்த பையனைப் பிடிச்சு, வரதட்சணை குடுத்து, அந்தப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் குடுக்குறார்கள்' என்ற அநாகரிக விமர்சனத்தோடு நிறுத்திக் கொள்வார்கள். ஆனால், அந்தப் பெண் திரும்பவும் ஓர் ஆணைக் காதலித்து, கல்யாணம் செய்துகொள்கிறாள் என்றால், 'இவளைப் போய் யார் காதலிச்சா?', 'இவளோட பழைய விஷயம் அவனுக்குத் தெரியுமோ, தெரியாதோ?'

'இவனோடயாவது ஒழுங்கா இருந்தா சரிதான்', 'அந்தப் பையன் பாவம்' என்றெல்லாம் காதுபடவே பேசுவார்கள். அழைப்பிதழை நீட்டும் பெண்ணை மனசார வாழ்த்துவதை விட்டுவிட்டு, 'கல்யாணமே பண்ண மாட்டேன்னு நினைச்சேன்' என்று நகைச்சுவையாகப் பேசுவதாக எண்ணிக் கொண்டு, அப்பெண்ணின் மனதைப் புண்படுத்துபவர்களை என்ன சொல்வது? இவர்கள் யாரும், அந்தப் பெண்ணின் கடினமான காலகட்டத்தில் உடன் இருந்து உதவியிருக்க மாட்டார்கள்.

இதற்குப் பின்னால் இருப்பது, 'அது எப்படி நீ மறுபடியும் காதலிக்கலாம்? கல்யாணம் செய்யலாம்? காலங்காலமாகக் கட்டமைத்திருக்கும் 'கற்பு' என்னும் கருத்தாக்கம் என்னாவது?' என்ற ஆணாதிக்க பொதுப்புத்திதான். 'பெண் காதலித்தாலே தப்பு, அதை உடைத்து விட்டு மறுபடியும் காதலித்தால், கல்யாணம் செய்தால் பெரிய தப்பு' என்ற கண்ணுக்குத் தெரியாத விலங்கால் நமது பெண்கள் அனைவரும் கட்டப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அதை உடைக்காதவாறு பொதுச் சமூகமும் மதங்களும் ஜாதியக் கட்டமைப்பும் ஊடகங்களும் பார்த்துக்கொள்கின்றன.

அன்புத் தோழியரே, காதலியுங்கள், அது தோல்வியுற்றால் மீண்டும், மீண்டும் காதலியுங்கள். இந்தச் சமுதாயம் ஆணாதிக்கமானதுதான். ஆனால், பெண்ணைச் சக தோழியாக மதிக்கும், அவள் உரிமைகளைப் பற்றிய புரிதல் உள்ள ஆண் தோழர்கள் இங்கு பலர் இருக்கிறார்கள். உங்கள் மனத்தடையை உடைத்தால், நம்பிக்கையுடன் முயற்சித்தால், உங்களுக்கேற்ற அற்புதமான இணையர் கிடைப்பார். அப்படி முயற்சித்து, ஏற்ற இணையைத் தேர்ந்தெடுத்து மகிழ்ச்சியாக வாழும் பல தோழிகளே இதற்கு சாட்சி. வாழ்தல் இனிது தோழியரே!











இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.03.2025 இல் வெளியிடப்பெற்றது.